**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 71/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சங்கரபாண்டியன் | த–பெ /க.பெ. | முத்தையா |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 37/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தொழில் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.06.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**12.06.2026**
**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

**1) ம.சா.ஆ 1 புரோநோட் யார் பூர்த்தி செய்தார் என்றால் என் நண்பர் அப்பாஸ். அப்பாஸின் தந்தை பெயர் என்ன என்றால் சிராஜிதீன். ம.சா.ஆ.1 ல் எழுதியதும், சாட்சியுமான என்ற இடத்தில் கையொப்பம் செய்தது யார் என்றால் அப்பாஸ். சாட்சிகள் என்ற இடத்தில் கையொப்பம் செய்தது யார் என்றால் நசீர் அகமது. அவரது தந்தை பெயர் என்ன என்றால் முகம்மது சிராஜிதீன், அப்பாஸின் தந்தை பெயர் முகம்மது அப்துல்லா. ஏற்கனவே அப்பாஸின் அப்பா பெயர் சிராஜிதீன் என்று சாட்சியம் அளித்த பின்பு தற்போது முகம்மது அப்துல்லா என்று அதற்கு முரனாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறாக கூறியுள்ளேன், அவரது தந்தை பெயர் முகம்மது அப்துல்லாதான். உண்மையாகவே எதிரி எனக்கு புரோநோட் கொடுக்காததால்தான் அதில் உள்ள சாட்சிகள் மற்றும் தந்தை பெயர் சரியாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எதிரியின் முன்னிலையில்தான் நிரப்பியது மற்றும் சாட்சிகள் கையொப்பமிட்டது.**

2) புரோநோட்டில் நிரப்பியவர் மற்றும் சாட்சிகளை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ம.சா.ஆ.2 வழக்கு காசோலையை நான்தான் நிரப்பினேன் என்றால் எதிரி நிரப்பி கொடுத்தார். என் முன்னிலையில் நிரப்பினாரா என்றால் என் முன்பு நிரப்பினார். எதிரி என்ன படித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி 6ம் வகுப்பு வரை மட்டும்தான் படித்துள்ளார் என்றாலும், அவருக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க வராது என்றாலும், வழக்கு காசோலையை நான் பூர்த்தி செய்துவிட்டு எதிரி பூர்த்தி செய்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிதான் நிரப்பி கொடுத்தார். ம.சா.ஆ.2 வழக்கு காசோலையில் கையொப்பம் தமிழிலும், பூர்த்தி செய்த விபரங்கள் ஆங்கிலத்திலும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் கையொப்பத்தில் உள்ள மைக்கும் நிரப்பியுள்ள விபரத்தில் உள்ள மைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை. எதிரி என்ன தொழில் தேவைக்காக கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் ஆட்டுப் பண்ணையை மேம்படுத்துவதற்காகவும், மற்றும் அவரது குழந்தைகளின் படிப்பிற்காக கடன் பெற்றார். எதிரி ஆட்டுப்பண்ணையை நிறுத்தி 4 வருடங்கள் ஆகிவிட்டது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி ஆட்டுப்பண்ணை வைப்பதற்காக கடன் பெற்றார் என்று புகார், பிரமான வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், தொழில் என்று குறிப்பிட்டுள்ளேன்.

3) எதிரி பெற்றதாக கூறும் கடன் எத்தனை நாட்களில் திருப்பி தருவதாக கூறினார் என்றால் ஒரு மாதத்தில் அவருக்கு வரவேண்டிய தொகை வந்துவிடும் என்று கூறி ஒரு மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். இரண்டு மாத காலத்தில் பணத்தைதிருப்பி தருவதாக என்று புகார், பிரமான வாக்குமூலம்

மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியிருந்தால் அது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல, 1–2 மாதம் கால அவகாசம் கேட்டிருந்தார். கடன் கொடுத்த தேதியில் எதிரி எனக்கு காசோலை கொடுக்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எப்போது எதிரி எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 1–2 மாதம் பணத்தை திருப்பி செலுத்தவில்லை, அதன் பின்பு 15.12.2024 ல் காசோலை கொடுத்தார். காசோலையில் என்ன தேதி குறிப்பிட்டிருந்தார் என்றால் 30.12.2024 தேதியிட்டு அந்த தேதிக்குள் எதிரிக்கு பணம் வரும் என்று என்னிடம் கூறினார். 30.12.2024 ல் காசோலையை வங்கியில் செலுத்தினேனா என்றால் இல்லை, டெப்பாசிட் செய்வதற்காக எதிரியை தொடர்பு கொண்டேன், எதிரி பதில் அளிக்கவில்லை, அதன் பின்பு 23.01.2025 ல் வங்கியில் செலுத்தினேன். எதிரியை நான் தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், எதிரியை எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியை தொடர்பு கொண்டதாக கூறுவது தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக என்றால் போன் செய்துள்ளேன் அதற்கான ஆவணம் உள்ளது. நான் பணம் கேட்டதற்கு எதிரி என் தகப்பனாருக்கு தொலைபேசியில் அழைத்து மிரட்டியுள்ளார் அதன் ரெக்கார்டிங் என்னிடம் உள்ளது. எந்த தேதியில் மிரட்டினார் என்றால் தற்போது நினைவில்லை. மிரட்டினார் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. உண்மையாகவே மிரட்டியதால்தான் காவல் நிலைத்தில் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், அதைபற்றி எனது புகார் மற்றும் பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பின்யோசனையிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என்னிடம் ஆடியோ உள்ளது.

4) என் தகப்பானர் கூடுதல் வட்டி கேட்டு தொந்தரவு செய்கிறார் என்று எதிரி அவர் மீது 2018 செப்டம்பரில் சிவகங்கை SP அலுவலகத்திற்கு புகார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அது தொடர்பாக என் தகப்பனாரை அழைத்து காவலர்கள் விசாரித்தார்கள் என்றாலும், அது எனக்கு நேரடியாக தெரியும் என்றாலும் சரியல்ல. 2018 ல் நானும் என் தகப்பனாரும் ஒரே வீட்டில் வசித்தோம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 சாட்சி கையொப்பம் செய்த நபர்கள் எனக்கு மட்டும் தெரிந்த நபர்கள் என்றால் இல்லை, எனக்கும் எதிரிக்கும் தெரிந்த நபர்கள் ஆவார். புரோநோட் எங்கு வைத்து பூர்த்தி செய்யப்பட்டது என்றால் என் வீட்டில். சாட்சி கையொப்பம் செய்ததாக கூறும் நபர்கள் நான் அழைத்துதான் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது என்வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் நான், எதிரி மற்றும் புரோநோட் எழுதிய என் நண்பர். எதிரியை எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், எதிரி என் தகப்பனாரிடம் ஏற்கனவே பெற்ற கடனிற்காக நிரப்பாத புரோநோட், எதிரியின் மாமனார் சேசுராஜின் சொத்துபத்திரத்தின் அசல் மற்றும் எதிரியின் 2 நிரப்பாத காசோலைகளை செக்யூரிட்டிக்காக கொடுத்து வைத்திருந்தார் என்றாலும் எதிரி பணத்தை கொடுத்த பின்பும் அந்த ஆவணங்களை திருப்பி செலுத்தாமல் என் தகப்பனார் என் மூலமாக எதிரி மீது பொய்யாக புகார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புரோநோட்டில் எதிரியின் கையொப்பத்தின் மைக்கும் பூர்த்தி செய்த மைக்கும்வித்தியாசம் உள்ளது என்றாலும், வெவ்வேறு காலக்கட்டத்தில் கையொப்பம் மற்றும் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கையொப்பம் செய்த பின்பு புரோநோட் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படி கொடுக்கவேண்டிய கடன் எதுவும் நிலுவை வைக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் இடையே எந்த ஒரு கொடுக்கல் வாங்கல் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எதிரியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக என் தகப்பானரிடம் எதிரி கொடுத்த காசோலை மற்றும் ஆவணங்களை வைத்து

**வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.12 08:20:26 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.